DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 305-2023 |
| Police Station | Sipcot PS |
| Deposition of Witness for | LW.1 / PW.1 |
| Name | செல்லமணி |
| Father's/Husband's Name | வைரவன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused produced on PT Warrant**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 04.02.2026 at **12**.30 p.m

**முதல் விசாரணை:**

நான் வைரவன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பூசாரியாக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி சுகுமாறனை எனக்கு தெரியும். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. சாட்சி பிறழ் சாட்சியாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சி சொல்லாததினால் அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்களை பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது:–

**அரசு தரப்பில் கு.வி**

31.12.2021 அன்று இரவு சுமார் 9.45 மணியளவில் மளிகை பொருட்கள் வாங்குவதற்காக எனது இருசக்கர வாகனத்தில் பெரியகோட்டை – இடைக்காட்டூர் செல்லும் தார்சாலையில் உள்ள தலையாரி பாண்டி வீட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்த போது எனக்கு முன்பு நன்கு தெரிந்த பாண்டியராஜன் இருசக்கர

வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த எதிரிகள் பால்பாண்டி, சுகுமாறன், கருப்பு ஆகிய மூவரும் பாண்டியராஜன் வண்டியை வழிமறித்து நீயும் உங்க அண்ணனும் எங்க மேல ஆடு திருட கேஸ் கொடுப்பீர்களா என்று கெட்ட வார்த்தை பேசி இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி சுகுமாறன் கையில் வைத்திருந்த வாளால் பாண்டியராஜனின் முன்தலையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், பால்பாண்டி கையில் வைத்திருந்த பிச்சுவாள்கத்தியால் வலது பக்க மார்புக்கு கீழே குத்தியும் இடது காரை எலும்புக்கு கீழ் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்திய போது எதிரி கருப்பு கையில் வைத்திருந்த கத்தியால் பாண்டியராஜனின் இடதுபக்க தொடை மற்றும் இடுப்பின் வலது பின் பக்கத்தில் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் நான் இதை பார்த்து சத்தம் போட்டதும் 3 பேரும் சேர்ந்து என்னை அசிங்கமாக பேசி எங்களை எதிர்த்தால் உங்களுக்கு சாவுதாண்டா என்று சொல்லி பால்பாண்டி கையில் வைத்திருந்த பிச்சுவாள்கத்தியால் எனது வயிற்றின் இடது பக்கம் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் சுகுமாறன் கையில் வைத்திருந்த வாளால் எனது இடது உள்ளங்கையிலும் இடதுபக்க முன்கழுத்திலும் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் கருப்பு வலது கை ஆள்காட்டி விரல் நடுவிரல் ஆகிய இடங்களில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் நான் அலறி துடிக்கவும் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வரவும் எதிரிகள் எங்களை பார்த்து பயந்துபோகவில்லை என்றால் உங்களை கொன்னுபுதைத்து விடுவோம் என மிரட்டிவிட்டு பால்பாண்டி அவர்கள் வந்த வண்டியை எடுத்துக்கொண்டும் எனது இருசக்கர வாகனத்தையும் எனது பைக்கில் வைத்திருந்த செல்போனையும் சேர்த்து திருடிக்கொண்டு அந்த வண்டியில் சுகுமாறனும் கருப்புவும் சென்றுவிட்டார்கள் என்றும் சம்பவத்தை பார்த்த அக்கம்பக்கத்தில் இருந்த பொதுமக்கள் பயந்து வீட்டை பூட்டிக்கொண்டார்கள் என்றும் அப்போது அங்கு நின்ற பாண்டியராஜன் பெரியப்பா மகன் அண்ணாதுரையும் அவரது மனைவியும் எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் பின்னர் 01.01.2022 காவல் நிலைய சார்பு ஆய்வாளர் நான் சொன்ன வாக்குமூலத்தை பதிவு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார் என்றும் இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் போலீஸ்

விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு கு.வி: இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 305/2023 |
| Police Station | Sipcot PS |
| Deposition of Witness for | LW.3 / PW.2 |
| Name | அண்ணாதுரை |
| Father's/Husband's Name | முத்துராக்கு |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused produced on PT Warrant**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 04.02.2026 at **12**.40 p.m

**முதல் விசாரணை:**

நான் புவனகிரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது சிவகங்கை சரோஜினி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி சுகுமாறனை எனக்கு தெரியும். பாண்டிராஜனை யாரோ 4 வருடத்திற்கு முன்பு வெட்டினார்கள். அவரை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். தேதி ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சி சொல்லாததினால் அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்களை பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது:–

**அரசு தரப்பில் கு.வி**

31.12.2021 அன்று இரவு சுமார் 9.45 மணியளவில் நானும் எனது மனைவியும் பெரியகோட்டை – இடைக்காட்டூர் செல்லும் தார்சாலையில் உள்ள தலையாரி பாண்டி வீட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்த போது எனது பெரியப்பா மகன் பாண்டியராஜன் ஒரு இருசக்கர வாகனத்தில் எங்களை கடந்து சென்று கொண்டிருந்த போது எதிரில் வந்த பால்பாண்டி, சுகுமாறன் மற்றும் கருப்பு ஆகிய 3 பேரும் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்து பாண்டியராஜன் வந்த வண்டியை வழிமறித்து நீயும் உங்க அண்ணனும் எங்க மேல ஆடு திருட கேஸ் கொடுப்பீர்களா என்று கெட்ட வார்த்தை பேசி இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி சுகுமாறன் கையில் வைத்திருந்த வாளால் பாண்டியராஜனின் முன்தலையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், பால்பாண்டி கையில் வைத்திருந்த பிச்சுவாள்கத்தியால் வலது பக்க மார்புக்கு கீழே குத்தியும் இடது காரை எலும்புக்கு கீழ் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்திய போது எதிரி கருப்பு கையில் வைத்திருந்த கத்தியால் பாண்டியராஜனின் இடதுபக்க தொடை மற்றும் இடுப்பின் வலது பின் பக்கத்தில் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் நான் இதை பார்த்த செல்லமணியை சத்தம் போட்டதும் 3 பேரும் சேர்ந்து அசிங்கமாக பேசி எங்களை எதிர்த்தால் உங்களுக்கு சாவுதாண்டா என்று சொல்லி பால்பாண்டி கையில் வைத்திருந்த பிச்சுவாள்கத்தியால் வயிற்றின் இடது பக்கம் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் சுகுமாறன் கையில் வைத்திருந்த வாளால் இடது உள்ளங்கையிலும் இடதுபக்க முன்கழுத்திலும் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் கருப்பு வலது கை ஆள்காட்டி விரல் நடுவிரல் ஆகிய இடங்களில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் இதைப்பார்த்த நானும் எனது மனைவியும் கத்திக்கொண்டு ஓடிவரவும் மேற்படி 3 பேரும் சேர்ந்து பாண்டியராஜனை பார்த்து நாங்க இந்த ஊரிலே பெரிய ரவுடிடா எங்களை பார்த்து பயந்துபோகவில்லை என்றால் உங்களை கொன்னுபுதைத்து விடுவோம் என மிரட்டிவிட்டு பால்பாண்டி அவர்கள் வந்த வண்டியை எடுத்துக்கொண்டும் செல்லமணி வந்த பைக்கில் சுகுமாறனும் கருப்புவும் தப்பித்து சென்றுவிட்டார்கள் என்றும் பின்னர் காயம்பட்ட இரண்டு பேரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் பின்னர் மேல்சிகிச்சைக்காக

மதுரை தனியார் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார்கள் என்றும் பின்னர் நடந்த சம்பவத்திற்கு செல்லமணி புகார் மனு கொடுத்ததாக கேள்விபட்டேன் என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

**எதிரி தரப்பு கு.வி: இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 305/2023 |
| Police Station | Sipcot PS |
| Deposition of Witness for | LW.4 / PW.3 |
| Name | ஏலம்மாள் |
| Father's/Husband's Name | அண்ணாதுரை |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused produced on PT Warrant**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 04.02.2026 at **12**.50 p.m

**முதல் விசாரணை:**

நான் புவனகிரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது சிவகங்கை சரோஜினி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி சுகுமாறனை எனக்கு தெரியும். பாண்டிராஜனை யாரோ 3 வருடத்திற்கு முன்பு வெட்டியதாக சொன்னார்கள். அவரை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். தேதி ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சி சொல்லாததினால் அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்களை பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது:–

**அரசு தரப்பில் கு.வி**

31.12.2021 அன்று இரவு சுமார் 9.45 மணியளவில் நானும் எனது கணவரும் பெரியகோட்டை – இடைக்காட்டூர் செல்லும் தார்சாலையில் உள்ள தலையாரி பாண்டி வீட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்த போது எனது பெரியப்பா மகன் பாண்டியராஜன் ஒரு இருசக்கர வாகனத்தில் எங்களை கடந்து சென்று கொண்டிருந்த போது எதிரில் வந்த பால்பாண்டி, சுகுமாறன் மற்றும் கருப்பு ஆகிய 3 பேரும் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்து பாண்டியராஜன் வந்த வண்டியை வழிமறித்து நீயும் உங்க அண்ணனும் எங்க மேல ஆடு திருட கேஸ் கொடுப்பீர்களா என்று கெட்ட வார்த்தை பேசி இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி சுகுமாறன் கையில் வைத்திருந்த வாளால் பாண்டியராஜனின் முன்தலையில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், பால்பாண்டி கையில் வைத்திருந்த பிச்சுவாள்கத்தியால் வலது பக்க மார்புக்கு கீழே குத்தியும் இடது காரை எலும்புக்கு கீழ் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்திய போது எதிரி கருப்பு கையில் வைத்திருந்த கத்தியால் பாண்டியராஜனின் இடதுபக்க தொடை மற்றும் இடுப்பின் வலது பின் பக்கத்தில் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் இதை பார்த்த செல்லமணியை சத்தம் போட்டதும் 3 பேரும் சேர்ந்து அசிங்கமாக பேசி எங்களை எதிர்த்தால் உங்களுக்கு சாவுதாண்டா என்று சொல்லி பால்பாண்டி கையில் வைத்திருந்த பிச்சுவாள்கத்தியால் வயிற்றின் இடது பக்கம் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் சுகுமாறன் கையில் வைத்திருந்த வாளால் இடது உள்ளங்கையிலும் இடதுபக்க முன்கழுத்திலும் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் கருப்பு வலது கை ஆள்காட்டி விரல் நடுவிரல் ஆகிய இடங்களில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் இதைப்பார்த்த நானும் எனது கணவரும் கத்திக்கொண்டு ஓடிவரவும் மேற்படி 3 பேரும் சேர்ந்து பாண்டியராஜனை பார்த்து நாங்க இந்த ஊரிலே பெரிய ரவுடிடா எங்களை பார்த்து பயந்துபோகவில்லை என்றால் உங்களை கொன்னுபுதைத்து விடுவோம் என மிரட்டிவிட்டு பால்பாண்டி அவர்கள் வந்த வண்டியை எடுத்துக்கொண்டும் செல்லமணி வந்த பைக்கில் சுகுமாறனும் கருப்புவும் தப்பித்து சென்றுவிட்டார்கள் என்றும் பின்னர் காயம்பட்ட இரண்டு பேரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் பின்னர் மேல்சிகிச்சைக்காக

மதுரை தனியார் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார்கள் என்றும் பின்னர் நடந்த சம்பவத்திற்கு செல்லமணி புகார் மனு கொடுத்ததாக கேள்விபட்டேன் என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

**எதிரி தரப்பு கு.வி: இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை